

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று (16.6.2023) சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிகவரித்துறை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அழைப்பு மையத்தை (Call Center) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி அரசு, முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் தீரஜ்குமார், கூடுதல் ஆணையர் நிர்வாகம் திருமதி வி.ஆர்.சுப்புலட்சுமி மற்றும் வணிகவரி உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நூற்றாண்டு கலையரங்கத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் திறந்து வைத்தார். உடன் நீதியரசர் புகழேந்தி, விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன், நகர மன்றத் தலைவர் டாக்டர்.சங்கவி முருகதாஸ், துணைத் தலைவர் திருமதி.ராணி தண்டபாணி ஆகியோர் உள்ளனர்.

## மதவாத பா.ஜ.க. ஆட்சியை அகற்ற

# மதச்சார்பற்ற சக்திகள் ஓரணியில் திரளவேண்டும்!

### ம.தி.மு.க. பொதுக் குழு தீர்மானம்!

சென்னை, ஜூன் 17-

“மதவாத பா.ஜ.க. ஆட்சியை அகற்ற மதச்சார்பற்ற சக்திகள் ஓரணியில் திரள வேண்டும்” என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் 29ஆவது பொதுக்குழு 14.06.2023 அன்று சென்னை, அண்ணா நகர், விஜயஸ்ரீ மகாலில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

வரலாற்று சிறப்பு மிகுந்த 29ஆவது பொதுக்குழுவில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளராக ஐந்தாவது முறையாக பொறுப்பேற்ற வைகோ அவர்களுக்கு இந்தப் பொதுக்குழு பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுகிறது.

தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என். ரவி பொறுப்பேற்ற காலத்திலிருந்து ஆளுநர் அலுவலகம் ராஜ்பவனில் இருந்து போட்டி அரசு நடத்திக் கொண்டிருக்கிறார்.

அரசியலமைப்புச் சட்டம் வழங்குகிற அதிகாரத்தை மீறி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை ஆதிக்கம் செய்ய நினைப்பதும், ஒன்றிய அரசை நடத்தும் பா.ஜ.க.வின் ஊதுகுழலாக, தமிழ்நாட்டில் சனாதன சக்திகளுக்கு ஊக்கம் தரும் வகையில் செயல்படுவதும் கடும் கண்டனத்துக்குரியது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகளுக்கு ஒப்புதல் தராமல் அதை நியாயப்படுத்தும் வகையில் ஆளுநர் ஆர்.என். ரவி பேசி வருவதும், தமிழ்நாடு அரசு தயாரித்துத் தந்த அறிக்கையில் உள்ள தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்களின் பெயர்களை தவிர்த்துவிட்டு தன் மனம்போன போக்கில் சட்டமன்றத்தில் உரையாற்றுவதும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

**பா.ஜ.க.வின் குதிரை பேரம்!**

மதவாத சக்திகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், இந்துத்துவ கோட்பாட்டை திணிக்கும் வகையிலும் பகிரங்கமாக செயல்பட்டு வரும் ஆர்.என். ரவி ஆளுநர் பொறுப்பில் நீடிப்பதற்கான தகுதியை இழந்து விட்டார்.

எனவே குடியரசுத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியை திரும்பப் பெற வலியுறுத்தி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மக்களிடத்தில் தமிழ்நாடு முழுவதும் கையெழுத்து இயக்கம் நடத்துவது என்று இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள், பாஜக வெல்ல முடியாத அரசியல் சக்தி என்ற மாயத் தோற்றத்தை உடைத்து எறிந்து இருக்கின்றது.

2018 இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில், கர்நாடக மக்கள் பாஜகவை வீழ்த்தினார்கள். மதச்சார்பற்ற ஜனதாதளம் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைந்தது.

ஆனால், பா.ஜ.க. குதிரைப் பேரம் நடத்தி, சட்டப்பேரவை உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, ஆளுநர் துணையோடு குறுக்கு வழியில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது.

கர்நாடகத்தை காவிமயமாக்கும் நடவடிக்கையில் இறங்கிய ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவ சக்திகள், சிறுபான்மை இஸ்லாமியர், கிறிஸ்தவ மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டன. இஸ்லாமிய மக்களின் பண்பாட்டு உரிமைகளைப் பறித்தன.

இந்துவத்துவ சோதனைச் சாலையாக மாற்றப்பட்ட கர்நாடகாவில், முஸ்லீம்களுக்கு வழங்கப்பட்டு வந்த இட ஒதுக்கீட்டை பா.ஜ.க. அரசு ரத்து செய்தது.

பா.ஜ.க.வின் ஏதேச்சதிகார, மதவெறி அரசியலுக்கு கர்நாடக மக்கள் தக்கப் பாடம் புகட்டி இருக்கிறார்கள்.

இந்தியாவில் மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் இந்துத்துவக் கும்பலை தேர்தல் களத்தில் வீழ்த்த முடியும் என்பதை கர்நாடக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெள்ளிடைமலையாக நிருபித்து இருக்கிறது.

பாசிசத்தை வேரறுக்க கர்நாடகாவில் மக்கள் சக்தி வெகுண்டு எழுந்தது போல, 2024 நாடாளுமன்றத்தேர்தலிலும் இந்தியா முழுவதும் நடக்கும்.

பா.ஜ.க. அரசை ஆட்சி பீடத்திலிருந்து அகற்ற மாநில உரிமைக்குப் போராடி வரும் அரசியல் கட்சிகள், மதச்சார்பற்ற முற்போக்கு ஜனநாயக சக்திகள் ஓரணியில் திரள வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

கர்நாடக மாநில துணை முதல்வரும், நீர்ப்பாசனத் துறைக்கு பொறுப்பு வகிக்கும் அமைச்சருமான டி.கே.சிவகுமார் நீர்ப்பாசனத் துறை தொடர்பான முதல் கலந்தாய்வுக் கூட்டத்திலேயே, காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் தடுப்பு அணை கட்டும் பணியை விரைவுப் படுத்தப் போவதாக அறிவித்துள்ளார். ஒன்றிய அரசின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கூறி உள்ளார்.

கர்நாடகத்தில் சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் அரசு இருந்தபோது, மேகேதாட்டு அணை கட்டி, 67.16 டி.எம்.சி. நீரை சேமிக்கவும், பெங்களூரு நகரின் குடிநீர் தேவைக்குப் பயன்படுத்தவும், 400 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட நீர் மின் நிலையம் அமைக்கவும் ரூ.9 ஆயிரம் கோடி மதிப்பிலானத் திட்டத்தைத் தயாரித்து, ஒன்றிய அரசுக்கு அனுப்பி அனுமதி பெற்றுவிட முனைந்தது.

**கருநாடகாவில் ஆட்சி மாற்றம்!**

இந்நிலையில், 2018இல் பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற பின்பு மேகேதாட்டு அணை கட்டும் திட்டத்திற்கு ஒன்றிய அரசின் ஒப்புதலைப் பெற முதல்வர் பொறுப்பில் இருந்த எடியூரப்பா மற்றும் பசவராஜ் பொம்மை ஆகியோர் தீவிரமாக முயன்றனர்.

பசவராஜ் பொம்மை கடந்த ஆண்டு கர்நாடக சட்டமன்றத்தில் 202223 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட அறிக்கையை தாக்கல் செய்த போது, மேகேதாட்டு அணை கட்டுவதற்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

இந்நிலையில்தான் கர்நாடக மாநிலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, மீண்டும் சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் அரசு கடந்த மாதம் பொறுப்பு ஏற்றது.

கர்நாடக மாநில துணை முதல்வரான டி.கே.சிவக்குமார், காங்கிரஸ் கட்சி எதிர்கட்சி வரிசையில் இருந்த போது, மேகேதாட்டு அணை கட்ட வலியுறுத்தி பெங்களூருவிலிருந்து 10.01.2022 இல் நடைபயணம் தொடங்கி, 10 நாட்கள் பல ஊர்கள் வழியாகச் சென்று 19.01.2022 அன்று மேகேதாட்டுவில் ஆர்ப்பாட்டமும் நடத்தினார்.

தற்போது மீண்டும் காங்கிரஸ் அரசு பொறுப்புக்கு வந்தவுடன், மேகேதாட்டு அணை கட்டும் பணியை தொடங்கப் போவதாக கூறி இருக்கிறது.

நீர்ப்பாசனத்துறை அமைச்சர் டி.கே. சிவக்குமார், மேகேதாட்டு அணை கட்டும் பணியை தொடங்குவோம்; எந்த நிலையிலும் பின்வாங்க மாட்டோம் என்று கூறி இருப்பது கண்டனத்துக்கு உரியது.

காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்டப்பட்டால் தமிழ்நாட்டிற்கு சொட்டுநீர்கூட காவிரியில் வராது. உச்ச நீதிமன்றம் பிப்ரவரி 16, 2018 இல் அளித்த தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய 177.25 டி.எம்.சி. நீர், கானல் நீராகவே போய்விடும் ஆபத்து தான் விளையும்.

எனவே ஒன்றிய பா.ஜ.க. அரசு மேகேதாட்டு அணை திட்டத்திற்கு அனுமதி அளிக்கவே கூடாது. தமிழ்நாட்டின் மரபு உரிமையை கர்நாடக மாநிலம் பறித்துக்கொள்வதை ஏற்கவே முடியாது.

எனவே, உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை தமிழ்நாடு அரசு விரைவுபடுத்த வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு வலியுறுத்துகிறது.

தலைநகர் டெல்லியில் அதிநவீன வசதிகளுடன், ஐந்து நட்சத்திர அடையாளத்துடன் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை பிரதமர் மோடி மே28 ஆம் தேதி திறந்து வைத்தார்.

புதிய நாடாளுமன்றம் திறப்பு விழாவை புறக்கணிக்கப் போவதாக காங்கிரஸ், இடதுசாரிகள், திரிணாமூல், ஆம் ஆத்மி, தி.மு.க., ம.தி.மு.க., வி.சி.க., ராஷ்ட்ரிய ஜனதா தளம், ஐக்கிய ஜனதா தளம், தேசியவாத காங்கிரஸ், சமாஜ்வாதி, உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா, ஏஐஎம்ஐஎம் உட்பட 19 எதிர்க்கட்சிகள் அறிவித்தன.

**ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்!**

இதுகுறித்து எதிர்க்கட்சிகள் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், “புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை தானே திறந்து வைக்க பிரதமர் மோடி முடிவு செய்திருப்பது குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்களை ஓரம்கட்டும் முயற்சி. இது அவரை அவமதிக்கும் செயல் மட்டுமல்ல, ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் ஆகும். இந்த முறையற்ற செயல் குடியரசுத் தலைவர் அலுவலகத்தை அவமதிக்கும் செயல் மட்டுமல்லாது, அரசியல் சாசனத்தையே அவமதிக்கும் செயல் ஆகும்“ என கூறப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் என்பவர் நாட்டின் தலைவர் மட்டுமல்ல, நாடாளுமன்றத்தின் ஒருங்கிணைந்த அங்கமும் ஆவார். நாடாளுமன்ற அவைகளின் கூட்டுக் கூட்டத்தைக் கூட்டி, உரையாற்றும் சிறப்பு அதிகாரத்தை அவர் பெற்றிருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் மசோதா சட்டமாக அமலுக்கு வருவதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும். சுருங்கச் சொன்னால் குடியரசுத் தலைவர் இல்லாமல் நாடாளுமன்றமே இயங்க முடியாது.

ஆனாலும் குடியரசுத் தலைவர் இல்லாமலேயே புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை ஒன்றய பா.ஜ.க. அரசு திறந்து வைத்திருக்கிறது.

இந்த கண்ணியமற்ற செயல், குடியரசுத் தலைவரின் உயர் பதவியை அவமதிப்பதோடு, அரசியலமைப்பின் உறுதி மற்றும் உணர்வை மீறுகிறது;

இந்திய நாடு தனது முதல் பெண் பழங்குடியின குடியரசுத் தலைவரைக் கொண்டாடுகிற அந்த உணர்வைக் குறைத்து மதிப்பிடுகிறது.

குடியசுத் தலைவரை அல்ல இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே அவமதித்து வரும் பா.ஜ.க அரசுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

தூத்துக்குடியில் இயங்கி வந்த ஸ்டெர்லைட் நச்சு ஆலை தொடர்ந்து விதிமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக 28.05.2018 அன்று தமிழ் நாடு அரசு அந்த ஆலையை நிரந்தரமாக மூட ஆணையிட்டது. இந்த ஆணையை சென்னை உயர் நீதிமன்றமும் 18.08.2020 அன்று உறுதி செய்தது.

இந்த ஆணைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த வேதாந்தா நிறுவனம், வழக்கு நிலுவையில் உள்ள காலகட்டத்தில் ஆலையின் பாரமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அனுமதிகோரி இடைக்கால மனுவும் தாக்கல் செய்திருந்தது.

**உச்சநீதிமன்றம் அனுமதி!**

ஆலை பராமரிப்புப் பணிகளின் தேவை குறித்து ஆராய தமிழ் நாடு அரசு அமைத்திருந்த உயர்மட்டக் குழு ஜூலை 2022ல் அறிக்கை ஒன்றை அரசிடம் தாக்கல் செய்திருந்தது.

இதன்படி 10.04.2023 அன்று ஆலையில் உள்ள கழிவுகளை அகற்றும் பணியை மேற்கொள்ளவும், பசுமைப் பரப்பை சீர்படுத்தும் பணியை மேற்கொள்ளவும் உச்ச நீதிமன்றமும் அனுமதி அளித்து உத்தரவிட்டிருந்தது.

தூத்துக்குடி ஆட்சியர் 29.05.2023 அன்று பிறப்பிதுள்ள ஆணையின் படி உச்சநீதிமன்றம் மற்றும் தமிழ்நாடு அரசின் ஆணைகளை நடைமுறைப் படுத்துவதற்காக தூத்துக்குடி மாவட்ட துணை ஆட்சியர் தலைமையில் மொத்தம் 9 பேர் கொண்ட உள்ளூர் மேலாண்மைக் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகத்தால் உருவாக்கப்பட்ட இக்குழுவே ஸ்டெர்லைட் ஆலைக்குள் நடைபெறவுள்ள கழிவுகளை நீக்கும் பணிகளைச் செய்வதற்கான முன் அனுபவமுள்ள நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறது.

ஆனால் வேதாந்தா நிறுவனம் வெளியிட்டுள்ள விளம்பர அறிவிப்பில், Expression of Interest (EOI) இன் அடிப்படையில் கட்டிட, கட்டமைப்பு பாதுகாப்பு மதிப்பீட்டாய்வு, ஆலை மற்றும் இயந்திரங்களை பழுது பார்த்தல்/புதுப்பித்தல்/மாற்றுதல், வடிவமைக்கப்பட்ட திறன் மற்றும் பழுது பார்க்கும் பணிகளை அடைய ஆலை மற்றும் இயந்திரங்களை இயக்குதல் ஆகியவை அடங்கும்.

**மக்கள் தீரள் போராட்டங்கள்!**

ஒப்பந்ததாரர்கள் தூத்துக்குடி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 4,000 நபர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு தகுதி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதிக திறன் வாய்ந்தவர்கள் முதல் சாதாரண தொழிலாளர்கள் வரை பல்வேறு பிரிவுகளில் பணியமர்த்த, தூத்துக்குடி மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளில் உள்ள உள்ளூர் விற்பனையாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது உச்சநீதிமன்ற ஆணையையும் தமிழ்நாடு அரசின் ஆணையையும் அப்பட்டமாக அத்துமீறும் நடவடிக்கையாகும். நீதிமன்ற அவமதிப்பு ஆகும்.

ஸ்டெர்லைட் நச்சு ஆலை தொடங்கப்பட்ட போது மறுமலர்ச்சி தி.மு.க. தூத்துக்குடியில் 5.3.1996 இல் உண்ணாவிரதம், 12.03.1996 இல் கடையடைப்பு, 1.4.1996 இல் ஸ்டெர்லைட் எதிர்ப்பு பேரணி 1997 இல் திருவைகுண்டம் முதல் தூத்துக்குடி வரை 3 நாட்கள் ஸ்டெர்லைட் எதிர்ப்பு நடைபயணம், 30.08.1997 இல் 30,000 பேர் கலந்து கொண்ட ஸ்டெர்லைட் முற்றுகை போராட்டம் என்று பல மக்கள் திரள் போராட்டங்களை நடத்தியது.

கழகப் பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் நீதி மன்றங்களில் ஸ்டெர்லைட் நச்சு ஆலையை எதிர்த்து வழக்கு தொடர்ந்து தானே வாதாடினார். பசுமை தீர்ப்பாயத்திலும் வழக்கில் வாதாடி 28.09.2010 இல் நச்சு ஆலையை முட வைத்தார்.

மீண்டும் 2013 இல் 100 கோடி ரூபாய் அபராதத்துடன் ஸ்டெர்லைட் ஆலை மூடுவதற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

தொடர்ந்து ஒவ்வொரு நிலையிலும் நீதிமன்றத்திலும் பசுமைத்தீர்ப்பாயத்திலும் வழக்கு தொடர்ந்து ஸ்டெர்லைட் நச்சு ஆலையை மூடுவதில் வெற்றியை நிலைநாட்டியுள்ளார் வைகோ அவர்கள்.

2018 மே மாதத்தில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் 13 பேர்கள் தங்கள் இன்னுயிரை இழந்து இந்த நச்சு ஆலையை நிரந்தரமாக முடியுள்ளனர். அவர்கள் தியாகம் வீண்போகாது.

வேதாந்த குழுமம் மீண்டும் நச்சு ஆலையை இயக்க முற்படுமானால், 1996 இல் நடைபெற்ற போராட்டங்களை விட இரண்டு மடங்கு உத்வேகத்துடன் மக்களைத் திரட்டி மறுமலர்ச்சி தி.மு.க. போராடும் என்பதை இப்பொதுக்குழு பிரகடனம் செய்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம், பாப்பானேரி சாலையில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டி.பாஸ்கரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற மரக்கன்றுகள் நடும் விழாவில் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு சிறப்பித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை கணபதி ராமசுப்பையா
### ஜூன் 17 (2006)



கழகத்தில் துவக்கக் காலந்தொட்டு உறுப்பினராக இருந்தவர். மாணவப் பருவத்திலிருந்தே திராவிட இயக்க உணர்வுடன் இந்தி எதிர்ப்பு, கம்யூனல் ஜி.ஓ. ரத்து, கருப்புக்கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தேவிகுளம் பீர்மேடு மீட்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர்.

மாணவர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாநாடுகளில் அமைப்பாளராக சிறப்புற பணியாற்றியவர்.

தனது நெருங்கிய நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் கழகத்திற்கு துரோகம் செய்து, கழகத்தைவிட்டு வெளியேறியபோதும் ‘தனது தலைவர் கலைஞர்தான்’ என்று தொடர்ந்து கழகத்தில் பணியாற்றியவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சர்வாதிகார பா.ஜ.க.வை வீழ்த்தி

# நாடாளுமன்றத் தேர்தலில் சரியான பாடம் புகட்டுவோம்!

அமைச்சர் செந்தில் பாலாஜி அதிரடியாக கைது செய்யப்பட்டிருக்கிறார். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் கூட்டாட்சித் தத்துவத்தை குலைக்கின்ற வகையில், அமலாக்கத்துறை நுழைந்திருக்கிறது. இவைகளெல்லாம் எப்படி நடக்கிறது? எதற்காக நடக்கிறது என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அமைச்சர் செந்தில் பாலாஜி பா.ஜ.க.விலோ அல்லது அ.தி.மு.க.விலோ இருந்திருந்தால் அவர் மீது எந்த நடவடிக்கையும் பாய்ந்திருக்காது. அவர் தி.மு.க.வில் சேர்ந்து, குறிப்பாக கோவை மண்டலத்தில் பா.ஜ.க.வின் ஆதிக்கத்தைத் தகர்த்துவிட்டார் என்ற ஒரே ஆத்திரத்தின் காரணமாக இன்றைக்கு அவர் பழிவாங்கப்படுகிறார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி விசாரணைக்கு முழு ஒத்துழைப்பையும் தருவதாகக் கூறியதற்குப் பிறகும், அவர் ஒரு அமைச்சர் என்ற நிலையில் இருந்தும்கூட, நள்ளிரவில் அவரை ஏன் கைது செய்கிறார்கள் என்பது ஒரு கேள்வியாக எழுந்து நிற்கிறது.

ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் போக்குவரத்துத்துறையில் வேலை வாங்கித் தருவதற்காக, செந்தில் பாலாஜி பணம் வாங்கினார் என்பது குற்றச்சாட்டு. ஊழல் நடந்தது ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில்.

எடப்பாடி பழனிசாமி இப்போது ஊழல் அமைச்சர் என்று செந்தில் பாலாஜியை கூறுவதன் மூலம் ஜெயலலிதாவையும் சேர்த்து அவர் அவமானப்படுத்துகிறார்.

அண்ணாமலை, ஜெயலலிதாவை ஊழல் முதலமைச்சர் என்று கூறியதற்காக பொங்கி எழுந்த அ.தி.மு.க.வினர், இப்பொழுது அவர்களே, ஜெயலலிதா ஆட்சியில் ஊழல் செய்த செந்தில் பாலாஜியை கைது செய்வதில் என்ன தவறு என்று சொல்லி தன்னுடைய புரட்சித்தலைவி மீது சேற்றை வாரி இறைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அமலாக்கத்துறை, இதற்கான ஆவணங்களை சேகரிப்பதற்காகத்தான் தலைமைச் செயலகம் வந்ததாகக் கூறுகிறது. 2021-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் இந்த அமலாக்கத்துறை செந்தில் பாலாஜி மீதான வழக்கை தொடர வேண்டும் என்று கூறி, அதற்கானமுழுஆவணங்களையும்ஏற்கனவேஉச்சநீதிமன்றத்தில்சமர்ப்பித்திருக்கிறது. அதனடிப்படையில் தான் உச்சநீதிமன்றமும் இந்த விசாரணைக்கு அப்போது உத்தரவிட்டிருக்கிறது.

ஏற்கனவே ஆவணங்களை சேகரித்து முடித்ததற்குப் பிறகு, புதிதாக இவர்கள் என்ன ஆவணங்களை சேகரிக்கப்போகிறார்கள்? இப்போது செந்தில் பாலாஜியிடம் அவர்கள் கேட்டிருக்கிற கேள்விகள் எல்லாம், இப்போது யார் யாரிடம் உங்களுக்கு தொடர்பு இருக்கிறது என்று தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு, ஏதாவது பிரச்சினைகள் கிடைக்குமா என்பதை தோண்டி எடுப்பதற்காகத்தான் இந்த விசாரணையை இவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இதுவரை பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு,ஒரு பா.ஜ.க.வினர் வீட்டில் கூட அமலாக்கத்துறையோ, வருமானவரித்துறையோ, சி.பி.ஐ.யோ எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்ததில்லை. இது பச்சையாக, ஒரு சார்பாக அரசு இயந்திரத்தை அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கான ஒரு உதாரணம்.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் சி.பி.ஐ.விசாரணை நடத்துவதற்கு தமிழ்நாடு அரசினுடைய முன் அனுமதியை பெற்றுத்தான் எடுக்க வேண்டும் என்ற ஒரு முடிவை நேற்று அறிவித்திருக்கிறது. இது ஏற்கனவே எடுத்திருக்க வேண்டிய முடிவு. ஏற்கனவே பல மாநிலங்களில் இத்தகைய ஒரு முடிவை எடுத்திருக்கின்றன. ஆனாலும் இப்போது எடுக்கப்பட்ட ஒரு முடிவு சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட ஒரு முடிவு.

ஊழல் என்பது பற்றி, ஊழல் வழக்கு பற்றி விசாரிப்பதற்கோ, தண்டனை வழங்குவதற்கோ யாரும் தடைபோட முடியாது. ஆனால் அது ஒரு அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி, ஒரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு நெருக்கடி கொடுக்கின்ற ஆயுதங்களாக, முறைகேடாக பயன்படுத்தும் பொழுதுதான், அதற்கு கடுமையான எதிர்ப்புகள் எழுந்து நிற்கின்றன.

தமிழ்நாட்டில் இன்றைக்கு அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, புலனாய்வுத்துறை, ஆளுநர், உள்துறை அமைச்சர் என்று பல அதிகார மையங்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் ஆட்சியை செயல்படவிடாமல் முடக்குகின்ற ஒரு நெருக்கடியை தந்து கொண்டிருக்கின்றன. மக்களைத் திரட்டி இந்த அடக்குமுறை சக்திகளை முறியடித்து, சர்வாதிகாரத்தை வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வீழ்த்துவது ஒன்றுதான் இதற்கு சரியான பாடமாக இருக்க முடியும். சிந்திப்போம்.



**விடுதலை இராசேந்திரன்**